பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரசோற்பத்தி ஹு வைகாசி 04 ம் சனிக்கிழமை [18—05—1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 165

# உணவு நிவாரணம் இல்லை;

# முல்லை மக்கள் போர்க்கொடி!

## அரச அதிபருக்கு ஒரு வாரம் காலக்கெடு

யாழ்ப்பாணம், மே 18

முல்லைத்திவு நகரப் பகுதியையும் அதன் அயற் கிராமங்களையும் விட்டு வெளியேறி, அகதிகளாகியுள்ள மக்களுக்கு வாராந்த உலர் உணவு நிவாரணம் ஒழுங்காக வழங்கப்படவில்லை. இதனை ஆட்சேபித்து சாத்வீகப் போராட்டம் ஒன்றை நடத்த இந்த மக்கள் முஸ்தீபு செய்து வருகின்றனர்.

உலர் உணவு நிவாரணத்தைச் சீராக வழங்க ஒரு வாரத்துக்குள் உரிய நடவடிக்கை எடுக்கும்படியும்—

இல்லையேல் தமது போராட்டம் ஆரம்பிக்கப்படும் என்றும் மகஜர் ஒன்றின் மூலம் நேற்று முன்தினம் அவர்கள் அரச அதிபருக்கு அறிவிப்பு விடுத்துள்ளனர்.

தண்ணிரூற்று, முள்ளியவளை, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு உடையார்கட்டு ஆகிய பகுதிகளில் தங்கியுள்ள அகதிகளே இத்தகைய அறிவிப்பை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக சுமார் நூறு அகதிகள் கையெழுத்திட்டு அரச அதிபருக்கு அனுப்பியுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நாம் எமது இடங்களை விட்டு வெளியேறி இப்பகுதிகளில் தஞ்சம் புகுந்த போது ஏற்கனவே வெளியிடங்களில் — வெளி மாவட்டங்களில் — இருந்து வந்த அகதிகள் அங்கு இருந்தனர்.

அதனால் நம் அகதிமுகாம்களில் தங்கக்கூடிய வசதி இருக்கவில்லை.

அகதி முகாம்கள் நிரம்பி வழிந்ததால் நாம் தனியார் வீடுகளிலேயே தங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

நம் இடம்பெயர்ந்து வந்து 11 மாதங்களாகிவிட்டன. வருமானத்தை இழந்தோம்; தொழில் இழந்தோம்; உடைமைகளை இழந்தோம். அதனால் உணவுக்கு வழியில்லாத பரிதாப நிலைக்குத் தள்ளப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இளம் தமிழ் ஆசிரியை வாகரையில் படுகொலை

யாழ்ப்பாணம், மே 18

மட்டக்களப்பு மாவட்டம், பூரியன் காட்டில் இளம் தமிழ் ஆசிரியை ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை ஸ்ரீலங்கா படையினரால் கைது செய்யப்பட்டார்.

வாகரை பாலர் பாடசாலை ஆசிரியையான தம்பிராசா நேசமலர் [24 வயது] என்ற இந்தப் பெண் கைதான தன் பின்னர் பாலியல் வன்முறைக்கு உள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது.

கைதான இரண்டு நாட்களின் பின்னர்—நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் இந்த இளம் அப்பாவி ஆசிரியை படையினரால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. [ஓ]

## மொரட்டுவ நகர் ஆற்றில் 10 மனித சடலங்கள்!

கொழும்பில் இருந்து 18 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள மொரட்டுவ நகரை அடுத்துள்ள ஆறு ஒன்றில் இருந்து பத்துப் பேரின் சடலங்களைப் பொலிஸார் மீட்டனர்.

சடலங்கள் அனைத்திலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

ஒரு சடலம் இளம் பெண் ஒருவருடையது. ஏனைய சடலங்கள் இளைஞர்களுடையவை.

உயிரிழந்தவர்கள் ஜே. வி. பி. சந்தேக நபர்களாக இருக்கலாம் என்றும் அரசு ஆதரவு கொலைப்படைகள் அக்கொலைகளைச் செய்திருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது. [ஓ-எ]

16 வருடங்களின் பின்

## சர்வதேச மன்னிப்புச் சபை விசாரணை குழு வர அனுமதி

சர்வதேச மன்னிப்புச் சபை அதிகாரிகள் நேரடியாக இலங்கை வந்து மனித உரிமைகள் மீறப்பட்டு வருவதான குற்றச்சாட்டு குறித்து விசாரணை நடத்த கொழும்பு அரசு அனுமதியளித்துள்ளது.

இத்தகவலை பிரதமரும் பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு டி. பி. விஜேதுங்கா கடந்த வியாழன் நாடாளுமன்றத்தில் பேசுகையில் வெளியிட்டார்.

பதினாறு ஆண்டுகளாக சர்வதேச மன்னிப்புச்சபை குழு இலங்கைக்கு விஜயம் செய்ய அரசு தடை விதித்து இருந்தது இப்போதுதான் அத்தடையை அரசு நீக்கியுள்ளது

அடுத்த மாதம் இலங்கை வரும் மூவர் கொண்ட குழுவினர், நாட்டின் எந்தப் பகுதிக்கும் சுதந்திரமாகச் சென்று, தமது விசாரணைகளை மேற்கொள்ள முடியும்— என்றும் பிரதமர் தெரிவித்தார்.

இலங்கையில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெறவில்லை என்று அரசு உத்தரவாதம் தந்தால் மட்டுமே, கடன் வழங்க முடியும் என்று ஐரோப்பிய சமூக நாடுகள் அறிவித்திருந்தன என்பது தெரிந்ததே. [ஓ எ-3]

## இந்திரா காங்கிரஸே பதவிக்கு வரும் சாத்தியம்

### கருத்து கணிப்புகள் தெரிவிக்கின்றன

புதுடில்லி, மே 18

எதிர்வரும் இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் திரு ராஜீவ் காந்தி தலைமையிலான இந்திரா காங்கிரஸ் கட்சி பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றும் என்று கருத்துக் கணிப்புகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கல்கத்தாவில் இருந்து வெளிவரும் ''சண்டே'' வாரப்பத்திரிகை நடத்திய கருத்துக் கணிப்பு ஒன்றில்— இந்திரா காங்கிரஸ் கட்சி எதிர்வரும் தேர்தலில் 310 ஆசனங்களைப் பெறும் என்று தெரியவந்துள்ளது.

'இந்தியா ருடே' வாரப் பத்திரிகை நடத்திய கருத்துக் கணிப்பில்—

இந்திரா காங்கிரஸ் குறைந்தது 233 ஆசனங்களைக் கைப்பற்றி தனிப் பெரும்பான்மைக் கட்சியாகத் திகழும் என்றும், பாரதீய ஜனதா கட்சிக்கு 155 ஆசனங்கள் கிடைக்கும் என்றும் தெரியவந்துள்ளது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சேமிப்பு வங்கிக்கு கப்பலில் பணம்

யாழ்ப்பாணம், மே 18

தேசிய சேமிப்பு வங்கியின் யாழ். கிளைக்கு முதற் தடவையாக ''லில்லி லிக்கி'' கப்பலில் 25 லட்சம் ரூபா பணம் வருகிறது. [ஓ-3]

## ஆனையிறவு படையினரும் ஷெல் வீச்சு

யாழ்ப்பாணம், மே 18

ஆனையிறவு முகாம் படையினர் நேற்று அதிகாலை தொடக்கம் முற்பகல் 10 மணி வரை இயக்கச்சிப் பகுதியை நோக்கி தாக்குதல் நடத்தினர்.

சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் செய்ததோடு, ஷெல் தாக்குதல்களும் இடம்பெற்றன. [ஓ]

### முச்சந்தி முரளி



...தெண்டா அடம்பிடிக்கிறதை ... வேணும்.........!

## ஐ. தே. கட்சிக்கு 52.31 வீத வாக்குகள்

கொழும்பு, மே 18

அண்மையில் நடந்த உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 52.31 வீத வாக்குகளும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட எதிரணிக் கட்சிகளுக்கு 47.69 வாக்குகளும் கிடைத்தன.

ஐ. தே. கவுக்கு கிடைத்த மொத்த வாக்குகள் 2 லட்சத்து 910 ஆயிரத்து 438 ஆகும் [51.02 வீதம்].

இ. தொ. காவுக்கு கிடைத்த வாக்குகள் 59,294, [1.04 வீதம்].

அக்குரஸ்ஸ பிரதேச சபைக்குப் போட்டியிட்ட ஐ. தே. கவின் சுயேச்சைக் குழுவுக்குக் கிடைத்த வாக்குகள் 14,411, [0.25 வீதம்].

ஐ. தே. க, இ. தொ. கா, சுயேச்சைக்குழு ஆகியன பெற்ற மொத்த வாக்குகள் [illegible] லட்சத்து 984 ஆயிரத்து

[3 ஆம் பக்கம் பார்க்க]

## பலாலி ஷெல்

யாழ்ப்பாணம், மே 18

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் இரவு 7-30 மணியளவில் வல்வெட்டித்துறைப்பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது

இதேவேளை பலாலியில் இருந்து தென்மராட்சிப் பகுதியை நோக்கியும் ஷெல் வீச்சுக்கள் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. [ஓ 15]

## கொழும்புப் பயணிகள் காட்டின் ஊடாக வந்தனர்

கொழும்பில் இருந்து புறப்பட்ட பயணிகள் தாண்டிக்குளத்தில் இருந்து சுமார் ஆறு மைல் தூரம் காட்டுப் பாதை வழியாக நடந்து வந்து, நேற்றுக் காலை யாழ்ப்பாணம் அடைந்தனர்.

நீண்ட இடைவெளியின் பின்னர் கடந்த புதன்கிழமை தாண்டிக்குளத்தில் இருந்து பயணிகள் பிரதான வீதி வழியாகச் செல்வதற்குப் படையினர் அனுமதி வழங்கினர்.

ஆனால் அடுத்த நாள் [வியாழன்] பிரதான வீதிவழியாகச் செல்ல அனுமதி மறுக்கப்பட்டது.

இதை அடுத்து பயணிகள் காட்டுப் பாதையால்— ஒற்றையடிப் பாதையூடாக— கொட்டும் மழையில் பெரும் அவலத்தின் மத்தியில் நொச்சிமோட்டைப்பகுதியை அடைந்து, அங்கிருந்து வாகனம் மூலம் பயணத்தைத் தொடர்ந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. [ஓ-8]

[மற்றொரு செய்தி 3 ஆம் பக்கத்தில்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

எம்மிடம் புதிய பழைய சினிமாப்பட வீடியோ கொப்பிகள் மலிவான விலையில் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஜெனனி றேடர்ஸ், கண்டி வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
[4075]

### வீணை விற்பனைக்கு

பாவிக்கக்கூடிய நிலையிலுள்ள உருத்திர வீணை விற்பனைக்கு உண்டு தொடர்பு: திரு. இ. இராமச்சந்திரன், தபாற்கந்தோர், வட்டுக்கோட்டை.
[4076]

### தேவை

வாய்ந்த வேப்பம்பூ தேவை. மில்க்வைற். யாழ்ப்பாணம்.
[சி 5060]

### மணமகள் தேவை

யாழ் இந்து 31 வயது, உதயச் செவ்வாய் உள்ள B Sc இலங்கைப் பட்டதாரி தற்போது Swiss இல் பிரஜா உரிமையும், நிரந்தரத் தொழிலுமுள்ள மணமகனுக்கு நன்கு படித்த, அழகிய மணப்பெண் தேவை. [பட்டதாரிகள் விரும்பத்தக்கது] சகல விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்: இல. 312, மே/பா உதயன், யாழ்ப்பாணம்.
[168.2]

### காணவில்லை

அன்ரன் ஜெகதீஸ்வரன் [ஜெகன்] என்பவரை 11 - 05 - 1991 இல் இருந்து காணவில்லை. இவருக்கு 10 வயது, கடைசியாக றோஸ் நிற ஷேர்ட்டும், நீல நிறக் காற்சட்டையும், தங்கமோதிரமும் அணிந்திருந்தார். தாய் இல்லை, வளர்ப்புத் தாயுடன் இருந்தார். கண்டவர்கள் தயவுசெய்து 19/6, ஈடப்பன் வீதி, யாழ்ப்பாணம் அல்லது இந்த விடுதி, நல்லூர் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும்.
[16837]

### பெண் லிகிதர் தேவை

தனியார் கல்வி நிலையத்திற்கு பெண் லிகிதர் தேவை சனி, ஞாயிறு தினங்களில் நேரில் தொடர்பு கொள்ளவும். 'A' Level Centre, கருத்துறை வீதி. 1 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
[சி-4948]

### புலமைப்பரிசில் பரீட்சை (ஆண்டு 5)

புதிய கல்வி நிலையத்தால் நடத்தப்படும் ஆண்டு 5 புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை [இரண்டாவது] 19 - 05 - 1991 ஞாயிற்றுக்கிழமை மு ப 8 00 மணி, மு ப 10 30 மணி 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். பி ப 4 00 மணி மக்கள் வைத்திய சாலை முன்பாக குளப்பிட்டி - ஆனைக்கோட்டை வீதியில் நடைபெறும் புலமைப்பரிசில் Day Class Weekend Class ஆரம்பமாகியுள்ளன.
[16821]

### ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் தனிப்பட்டவர்களுக்கான ஆரம்ப அறிவிலிருந்து நடத்தப்படும் ஆங்கிலப் பயிற்சி வகுப்புகள் தினமும் காலை 10-00 மாலை 2-00 மணி வரை நடைபெறும். உங்கள் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். நேரில் அல்லது கடித மூலம் தொடர்பு கொள்ளவும். S ஜெயராஜா 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.
[16572]

---

# BITSMANS
## INSTITUTES MANIPAY

**A/L தாவரவியல்**
திரு. குணசீலன் B. Sc (Hons)

**92 - உடற்றொழிலியியல்**

**91 - வினா - விடை**
[பிறப்புரிமையியல்]

ஆரம்பம்: 20 - 05 - 1991
திங்கள் 12.30 p. m

(முதல் வகுப்பிற்கு சமுகமளிக்காதவர்கள் பின்னர் அனுமதிக்கப்படமாட்டார்கள்.)
[சி-4941]

---

இன்று ஆரம்பம்!

# NEW SCIENCE ACADEMY
FRONT OF ELILAKAM : JAFFNA


## 92 A/L
**PURE / APPLIED MATHS**
BY
திரு. சந்திரமோகன்
Sat., Sun. 12-00 — 2-00

✶ வகையீடு ✶ எறியம்
✶ நேர்கோடு ✶ உராய்வு

**ஆரம்பம் 18 - 05 - 1991**
[சி/5068]

---

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## பொ. சிவஞானசுந்தரம்
[கப்டன் ரமேஸ் மாஸ்டர்]

தாயக மண்ணில்: 25 8-1961
மண் மீட்பில்: 20 5-1988
திதி: 18 05-1991

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;
பெற்றோர், அன்புக்குரியவர்கள், உறவினர்கள்.
பொலிகண்டி.
[4080]

---

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 20 6 - 1950
உதிர்வு: 18 - 05 - 1984

டாக்டர் திருமதி
## அமிர்தகௌரி பகீரதன்

ஏழாண்டு காலம் ஓடி மறைந்ததம்மா!
எம் மனதிலோ உம் துயரம் என்றும் மாறவில்லை
நித்தம். நித்தம் இறைவனிடம் வேண்டுகின்றோம்:
உம் ஆத்ம சாந்திக்காக;

கணவன், மகன்,
பெற்றோர், உறவினர்கள்.

"சபாரத்தினம் லொஜ்"
திருநெல்வேலி.
[16823]

---

## 6 ஆம் மாத நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்தியமும்



கட்டுவன் நேரடி மோதலில் வீரமரணமடைந்த
வீரவேங்கை
## ஸ்ராலின்
[துரைரட்ணம் பகீரதன்]
[ஸ்கந்தவரோதயக் கல்லூரி, உயர்தர மாணவன்]

தாயின் மடியில்: 28 - 03 - 1972
தாயக மீட்பில்: 22 - 12 - 1990

அன்புச் செல்வமே! எமதுயிரே!
விண்ணகம் தனை ஆளச் சென்று-இன்றோடு
ஆறு மாதங்கள் முடிந்ததையா;
மறக்குமா உன்முகம்! - தமிழீழத்தில்
சிறக்குதையா உனது வீரம்!
கட்டுவன் மண்ணிலே - நெஞ்சில்
குண்டுமே தாங்கி உன் குருதியை மண்ணுக்கே
-கொடுத்த
உன் தியாகம் அப்பப்பா! மெய் சிலிர்க்குதையா!
வீரத்திலே மட்டுமா சிறந்தவன் நீ!
அன்பைப் பொழிவதிலும் தீரன் நீ!
உன் சக தோழரை மகிழ்வித்த நண்பன் நீ!
தாயை நேசிப்பவன்தான் தாய் மண்ணையும்
நேசிப்பான்
என அடிக்கடி கூறியவனே!
செயலிலும் அதனைக் காட்டியவன் நீ!
உனது ஆத்மா சாந்தியடைய
விரைவில் மலரும் தமிழீழமையா!

உனது பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா, அக்காமார்,
அண்ணா, அத்தான், குட்டிமருமகன்,
மற்றும் உற்றார், உறவினர்கள்.

170/2 கண்டிவீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.
[4078]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## படையும் அரசும்

கடந்த ஜூன் மாதத்தில் வடக்கு - கிழக்கில் யுத்தம் தொடங்கிய பின்னர், மூவாயிரத்துக்கும் அதிகமான அரசாங்கப் படையினர் காயமுற்றிருக்கிறார்கள். அவர்களில் மூன்றில் ஒரு பங்கினருக்கும் கூடுதலானோர் நிரந்தர அங்கவீனர்கள் ஆகிவிட்டார்கள்.

அவர்கள் ஆயுள் முழுவதும் ஊனமடைந்தவர்களாகவே வாழ வேண்டிய நிலையில் உள்ளனர்.

பாதுகாப்புப்படை உயர் அதிகாரிகள் வெளியிட்ட இந்தத் தகவல்கள் பல முக்கிய அம்சங்களை வெளிப்படுத்துகின்றன.

பதினொரு மாதப் போரில் ஆயுதப்படையினருக்குப் பலத்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது. வெறும் பேச்சுக்கு, பிரசாரத்துக்குத் தமது இராணுவ நடவடிக்கைகள் வெற்றி அடைவதாகக் காட்டிக்கொண்டாலும், இழப்புகள் அவர்களை உள்ளூர உறுத்தவே செய்கின்றன.

பாவங்கள்! அவர்களும் மனிதர்கள் தானே! இறந்தால் ஒரு கவலை, நிரந்தர ஊனமுற்று உயிர் வாழ்ந்தால் அது நாளாந்தம் கவலை என்பது அவர்களுக்கும் பொருந்தும் அல்லவா?

ஆனால் அவர்கள் செய்த அட்டூழியங்களால் இறந்த அப்பாவிப் பொதுமக்களையும், ஊனமுற்று உழலும் மக்களையும் நோக்கினால் — வினை விதைத்தவர்கள் அதனை அறுவடை செய்துதான் ஆக வேண்டும் என்ற இயற்கையின் நியதி தானாகவே, யாரும் சொல்லாமலே செயற்படுகிறது என்று கொள்ள வேண்டியுள்ளது.

தங்கள் படையைச் சேர்ந்தவர்கள் இறப்பதற்காகவும், ஊனமுறுவதற்காகவும் அனுதாபப்படும் படை உயரதிகாரிகள், அப்பாவித் தமிழ் மக்களைத் தமது அணியினர் கொன்று குவிக்கிறார்களே என்று சிறிதேனும் அனுதாபப்படுகிறார்களா?

அப்படி அனுதாபப்படுபவர்களாக, மனிதாபிமானம் உள்ளவர்களாக இருப்பின் போரை நிறுத்துமாறு அரசுக்கு எப்போதோ சிபார்சு செய்திருப்பார்கள். தமது தோல்வியை மறைக்க முயற்சிக்கமாட்டார்கள்.

போரில் தாங்கள் வெற்றி அடைய முடியாது என்பது தெரிந்தவர்கள் உயர் அதிகாரிகள். சில சந்தர்ப்பங்களில் அதனை மறைமுகமாகக் கூறியுமுள்ளார்கள். அவ்வாறானவர்கள் யுத்தத்தைத் தொடர வேண்டும் என்று கங்கணம் கட்டி நின்றதுக்கு, நிற்பதற்கு காரணம் என்ன? இயலாத ஒரு காரியத்துக்கு மேலும் கால அவகாசம் கேட்பதன் காரணம் என்ன?

இராணுவ நடவடிக்கைகளைத் தொடருவதன் மூலமே அரசாங்க இயந்திரத்தை உடைத்து இராணுவ மேலாண்மையை உருவாக்க முடியும் என்பதை உயர் அதிகாரிகள் அறிந்து வைத்திருக்கிறார்கள்.

அரசாங்கத்துக்கு உதவும் படையாக, சட்டம்-ஒழுங்கை நிலைநிறுத்த உதவும் படையாக இல்லாமல், அதற்கு மாறாக அரசாங்கத்தின்மீது அதிகாரம் செலுத்தும் இராணுவமாக இருந்து இராணுவ ஆட்சியை உருவாக்கும் நோக்கமுடைய எந்தப் படையும் மனித அவலம் பற்றி அனுதாபப்படுவதில்லை.

இது அரசகட்டிலில் உள்ளவர்களுக்குத் தெரியாமல் இருக்கக் காரணம் இல்லை. இராணுவத்தைக் கட்டுப்படுத்தப் போதிய பலமும், அதிகாரமும் இல்லாமல் அது திக்குமுக்காடுகிறது!

## வேலை நிறுத்தம் செய்யத் தடை

மாஸ்கோ, மே 18

முக்கிய தொழில் துறைகளில் வேலை நிறுத்தம் நடப்பதைத் தடை செய்யும் ஆணை ஒன்றை சோவியத் ஜனாதிபதி மிக்கயில் கோர்பசேவ் நேற்றுப் பிறப்பித்தார். [இ-எ]

## குழாய்க் கிணறு அமைக்க உதவி

யாழ்ப்பாணம், மே 18

வடமாகாண தெங்கு-பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச அலுவலகத்தில் ஓர் குழாய்க் கிணறு அமைப்பதற்கு, பூநகரி தெ. ப. பொ. கூ. சங்கம் நன்கொடையாக நிதி வழங்கியுள்ளது. [இ]

# அகதி முகாம்களில் வயிற்றோட்ட நோய் பரவும் ஆபத்து

## மடு அகதி மரணம்

யாழ்ப்பாணம், மே 18

யாழ்ப்பாணப் பகுதியில் அமைந்திருக்கும் அகதி முகாம்களில் வயிற்றோட்ட நோய் பரவும் அபாயம் தோன்றி உள்ளது.

அகதிகளில் சிலர் வயிற்றோட்ட நோய் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அகதி முகாம்களில் சுகாதார சேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதாரம் பேணுவதில் அகதிகளும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.

சந்நிதியான் சைவப் பிரகாச வித்தியாசாலை முகாமில் இருந்து சரவணையைச் சேர்ந்த அம்புஜபாதம் முத்துலக்ஷ்மி [வயது 25] அவரது மகள் சிருசாந்தி [3 மாதம்] மற்றும் பாலசிங்கம் பாலதீபன் [வயது 13] ஆகியோரும், அரியாலை அகதி முகாமில் இருந்து கந்தசாமி விஜயகுமார் [வயது 2½] என்பவரும் வயிற்றோட்ட நோய் காரணமாக கடந்த வியாழக்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை மடு அகதி முகாமிலிருந்து வயிற்றோட்டம் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த வாரம் அனுமதிக்கப்பட்டவரான முத்து பண்டாரம் என்பவர் நேற்று முன்தினம் வைத்தியசாலையில் மரணமானார். [இ-15]

## மசூருக்கு புதிய நியமனம்

முன்னாள் செனட்டர் மசூர் மௌலானா சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பிரதித் தூதுவருக்கு உதவியாக நியமிக்கப்பட்டுள்ளார் என்று கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. [இ]

## பண்ணை போக்குவரத்து

புளியங்கூடல், மே 18

பண்ணைப் பாலத்தில் போடப்பட்டிருந்த மரக்குற்றிகள் கடல் பெருக்கால் அள்ளுண்டு சென்றதால் கடந்த செவ்வாயன்று போக்குவரத்து பாதிக்கப்பட்டது. [இ-125]

காரைநகரில் சிக்கி உள்ளோரை

## மீட்கும் முயற்சி இதுவரை பலன் அளிக்கவில்லை

காரைநகரில் சிக்கியுள்ள இனத்தவர்களை மீட்டுத் தருமாறு செஞ்சிலுவைச் சங்கத்திடம் விடுத்த கோரிக்கைக்கு இதுவரை பலன் எதுவும் கிடைக்கவில்லையே

காரைநகரில் சிக்கியுள்ளவர்களின் இனத்தவர்கள் இப்படிக் கவலை தெரிவிக்கின்றனர்.

இரண்டாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் அங்கு சிக்கியுள்ளனர் என்றும் அவர்கள் வைத்திய, குடிதண்ணீர், உணவு வசதிகள் இன்றிப் பெரும் கஷ்ட நிலையில் உள்ளனர் என்றும், அவர்களை மீட்டுத் தருமாறும் அவர்களின் இனத்தவர்கள் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடமும், இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையிடமும் நேரடியாக கோரிக்கை விடுத்திருந்தனர்.

ஆனால் இதுவரை பலன் எதுவும் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-3]

## சொந்த இடங்களுக்கு மக்கள் திரும்புகின்றனர்

யாழ்ப்பாணம், மே 18

சமீபத்திய இராணுவ நடவடிக்கை காரணமாக ஒரு தைப் பகுதியில் இருந்து வெளியேறிய மக்கள் தற்போது மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர்.

இப்படித் திரும்பியவர்களில் பலர் தமது வீடுகளில் உடனடியாகக் குடியேற முடியாத நிலையில் இருந்து வருகின்றனர்.

இவர்களது வீடுகள் சேதமாக்கப்பட்டிருப்பதே இதற்குக் காரணம் ஆகும்.

வீடுகளை இழந்த சிலர் மரநிழல்களில் தங்கி உள்ளனர். சிலர் புதிதாக கொட்டில்களை அமைக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-15]

## மோட்டார் வாகனம் திருத்த பெண்களுக்குப் பயிற்சி

யாழ்ப்பாணம், மே 18

யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகம், பெண்களுக்கான சுயவேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தில் சகல விதமான மோட்டார் வாகனங்களையும் பழுது பார்த்துத் திருத்த செய்முறையுடன் கூடிய பயிற்சி வழங்கப்படும்.

ஒவ்வொரு நாளும் நான்கு மணித்தியாலங்கள் வீதம் தொடர்ந்து ஆறு மாதங்களுக்கு பயிற்சியளிக்கப்படும். வார இறுதிநாட்களில் பயிற்சி நடைபெறமாட்டாது.

பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறும் அனைத்துப் பயிற்சியாளர்களுக்கும் தொழில் புரிவதற்கான உபகரணத் தொகுதிகள் வழங்கப்படும். அவர்களுக்கான வேலை வாய்ப்பு வசதிகளும் ஏற்படுத்திக்கொடுக்கப்படும்.

மேற்படி பயிற்சித் திட்டத்துக்கு 18 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விவரங்களுக்கு யாழ். பல்கலைக்கழகம் மறுமலர்ச்சிக் கழகத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [இ]

## ரஞ்சனின் இடம் அவரது மகனுக்குக் கிடைக்கவில்லை

கொழும்பு, மே 18

குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் உயிரிழந்த பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவின் இடத்துக்கு திரு. ஆர். ஏ. டி. சிறிசேன என்பவர் தேசியப்பட்டியல் மூலம் எம். பி. யாக நியமிக்கப்பட்டார்.

புதிய எம். பி. யாக நியமனம் பெற்றுள்ள திரு சிறிசேன, ஹொரணியாவல தொகுதி ஐக்கிய தேசியக் கட்சி பிரதி அமைப்பாளராகப் பணியாற்றி வந்தார்.

ரஞ்சனின் இடத்துக்கு அவரது புதல்வர் ரொஹான் விஜேரத்தினா நியமிக்கப்படுவதாக முன்னர் தெரிவிக்கப்பட்டது.

மே மாதமளவில் எம். பி. பதவியை ஏற்கப் போவதாக திரு. ரொஹான் விஜேரத்தினா அறிவித்திருந்தார்.

ஆனால் தற்போது சிறிசேன என்பவர் தேசிய பட்டியல் மூலம் தெரிவாகி இருக்கிறார்.

## தடை முகாம்களிடையில் பயணிகள் கால்நடையில்

யாழ்ப்பாணம், மே 18

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா செல்வோரும் வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வருவோரும் தாண்டிக்குளத்துக்கும், கொக்குவெளிக்கும் இடையில் சுமார் ஒன்றரை மைல் தூரத்தை நடந்து கடக்க வேண்டியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போது தாண்டிக்குளத்தில் உள்ள பழைய இராணுவ தடை முகாம் தவிர அதற்கு அப்பால் வடக்கே நொச்சிமோட்டைக்கு அருகே உள்ள கொக்குவெளியிலும் படையினரின் தடை முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் இருந்து வடபகுதி வருவோர் தாண்டிக்குளம் தடைமுகாமில் சோதனையிடப்பட்டு அனுப்பப்படுகின்றனர். அதே போன்று வடக்கில் இருந்து வவுனியா செல்வோர் கொக்குவெளித் தடைமுகாமில் சோதனையிடப்பட்டு அனுப்பப்படுகின்றனர்.

போவோரும், வருவோரும் இரு தடை முகாம்களுக்கும் இடையிலான சுமார் ஒன்றரை மைல் தூரத்தை நடந்தே கடக்கவேண்டும்.

இந்தப் பாதையின் இடையில் உள்ள கொக்குவெளிச் சந்தியில் படையினர் தமது நிலையைப் பலப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஆஸ்திரேலியா நிதியுதவி

கொழும்பு, மே 18

புனர்நிர்மாண மற்றும் புனர்வாழ்வுப் பணிகளுக்கு என்று ஆஸ்திரேலிய அரசு 3 லட்சத்து 25 ஆயிரம் ஆஸ்திரேலிய டொலர்களை இலங்கைக்கு வழங்க முன்வந்துள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் விவசாயத்துறை வளர்ச்சிக்குத் தேவையான தண்ணீர் இறைக்கும் பம்புகள் மற்றும் மீன்பிடி வள்ளங்களுக்குப் பொருத்தப்படும் இயந்திரங்களை வாங்குவதற்கு இந்த நிதி உதவி வழங்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

# ப. நோ. கூ. சங்கங்களை மீண்டும் தீவுப் பகுதிக்கு மாற்ற முயற்சி

புளியங்கூடல் மே 18

தற்போது யாழ்ப்பாணத்துக்கு இடம்பெயர்ந்துள்ள ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கத்தை மண்கும்பானில் இயங்க வைக்கவும், வேலணை ப. நோ. கூ. சங்கத்தை வேலணை கிழக்குப் பகுதியில் இயங்க வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அடுத்த கட்ட உலர் உணவை அந்தந்தப் பகுதியிலேயே விநியோகிக்கவும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்துள்ள இந்தச் சங்கங்கள் யாழ் நகரில் தற்போது தற்காலிகமாக இயங்கி அப்பகுதி மக்களுக்கான உலர் உணவையும் யாழ் நகரில் வைத்தே விநியோகித்து வருகின்றன.

அதே சமயம், யாழ் நகரப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் தற்காலிகமாக இயங்கி வரும் வேலணை, மண்டைதீவு புங்குடுதீவு கொத்தணிப் பாடசாலைகள் மீண்டும் இம்மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் அவ்வப் பகுதியிலேயே இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் —

சீரற்ற நிலைமை காரணமாக இடம் பெயர்ந்த சகலரும் தத்தமது சொந்தப் பாடசாலைகளுக்கு சமுகமளிக்குச் செல்லுமாறும் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. புவனேந்திரன் அறிவுறுத்தல் வழங்கி உள்ளார். [இ-135]

## ஐ. தே. க...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

143 வாக்குகள் ஆகும். [52 31 வீதம்]

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஒரு லட்சத்து 996 ஆயிரத்து 820 வாக்குகள் மட்டுமே கிடைத்தன [35 00 வீதம்]

ஸ்ரீ ல. சு. க. உள்ளிட்ட ஏனைய கட்சிகள், குழுக்கள் எல்லாவற்றுக்கும் கிடைத்த வாக்குகள் 2 லட்சத்து 720 ஆயிரத்து 847 [47:69 வீதம்] ஆகும். [ஒ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலக உத்தியோகத்தர் துறைமுகத்தில் பணிபுரிவார்

பருத்தித்துறை துறைமுகத்தில் யாழ். செயலக உத்தியோகத்தர் ஒருவரும் கடமை புரியவுள்ளதாகத் தெரியவருகிறது.

கப்பலில் வரும் பொருள்களைக் களஞ்சியப்படுத்தல், மற்றும் சம்பந்தப்பட்ட இடங்களுக்குப் பொருள்களை அனுப்பி வைப்பதில் முறைகேடுகள் இடம்பெற்று வருவதாக புகார்கள் கிடைத்ததை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

முறைகேடுகள், கையாடல்களைத் தவிர்க்கும் முகமாக செயலக அதிகாரி ஒருவரின் கண்காணிப்பில் துறைமுக நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. [ஒ-5]

## அரச அதிபராக பெண்மணி!

கொழும்பு, மே 18

திருமதி சே. பி. ஆர். குணதிலக்க கேகாலை மாவட்ட அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையின் சரித்திரத்திலேயே பெண் ஒருவர் அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டது இதுவே முதற் தடவையாகும். [ஒ-எ]

## திருட்டு

திருநெல்வேலி, மே 18

நேற்று முன்தினம் நள்ளிரவு மல்லாகம் நீதிமன்ற வீதியில் உள்ள புடைவைக் கடை ஒன்று உடைக்கப்பட்டு அங்குள்ள துணிகள் திருடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. [ஒ-143]

## 100 லொறிகளுக்கு அனுமதி

யாழ்ப்பாணம், மே 18

வவுனியாவுக்கு வடக்கே வர 100க்கு மேற்பட்ட லொறிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. [ஒ-3]

## அராலித்துறை நோக்கி ஷெல் வீச்சு!

யாழ்ப்பாணம், மே 18

ஊர்காவற்றுறை இராணுவத்தினர் நேற்று முன்தினம் [வியாழன்] மாலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை ஷெல்வீச்சுக்களை நடத்தினர்.

அராலித்துறைப் பகுதியில் பனணிகள் விடுதிக்கு அருகிலும், பிரதான பாதையிலும் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

இப்பகுதியில் வைக்கப்பட்டிருந்த பெரும் எண்ணிக்கையான கூரைத் தகடுகள் [சீற்றுகள்] சேதமடைந்தன. [ஒ-125]

## வலந்தலை படையினர் தாக்குதல்

யாழ்ப்பாணம், மே 18

நேற்று முன்தினம் இரவு 9 30 மணியளவில் வலந்தலைச் சந்தியில் இருந்து படையினர் பொன்னாலைச் சந்தியை நோக்கித் தாக்குதல் நடத்தினர்.

பொன்னாலைச் சந்தியை நோக்கி சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. ஷெல், பீரங்கிச் சத்தங்களும் கேட்டன.

பீதியுற்ற மக்கள் இரவுப் பொழுதை அலற்ஙிராமங்களில் கழித்தனர்.

[ஒ-28-15-125]

## உணவு நிவா...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பட்டுள்ளோம்.

இடம் பெயர்ந்த மக்களுக்கு அவர்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமரும் வரை உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

ஆனால் கடந்த 44 வாரங்களில் நான்கு வாரங்கள் மட்டுமே எமக்கு உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டது.

அரசினரால் நாம் இவ்வாறு புறக்கணிக்கப்படுவதால் நாம் மூன்று வேளை உணவு உட்கொண்டு பல மாதங்களாகி விட்டன. ஒரு நேர உணவுக்கே வழியற்றுத் தவிக்கிறோம்.

எமது குழந்தைகள் பசித்த முகத்துடன் எம்மைப் பார்க்கின்றன. அப்போது நாங்கள் பசித்த முகத்துடன் உங்களைப் பார்க்க வேண்டியதாயிற்று.

தங்களிடமும், தங்கள் அதிகாரிகளிடமும் எமது நிலைமையைப் பல முறைகள் எடுத்துக்கூறிய போதிலும் எமது பசித்த வயிற்றுக்கு ஒரு பிடி சோறுதானும் கிடைக்கவில்லை.

நாளாந்தம் பட்டினியை எதிர்நோக்கியிருக்கும் நாம் எமது சாத்வீகப் போராட்டத்தை இறுதி நடவடிக்கையாகவே தொடங்க இருக்கிறோம்— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஏ-உ]

## இந்திரா....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

முன்னாள் பிரதமர் வி பி சிங் தலைமையிலான ஜனதா தளக்கட்சிக்கு 105 ஆசனங்களே கிடைக்கும் என்றும் 'இந்தியா டுடே' கருத்துக் கணிப்பில் கூறப்பட்டுள்ளது.

சென்னையில் இருந்து வெளிவரும் 'டிரொன்டலைன்' ஆங்கில வார இதழ் நடத்திய கருத்துக் கணிப்பில் இந்திரா காங்கிரஸே நாடாளுமன்றத்தில் தனிப் பெரும் கட்சியாக வரும் என்றும்—

''திரிசங்கு'' நாடாளுமன்றமே [illegible] என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஏ-எ]

---


## யாழ்ப்பாணக் கல்லூரி

### 12ஆம் ஆண்டு (1993 Batch) வகுப்பில் புதிய மாணவர்களைச் சேர்த்தல்

இந்த வகுப்பில் புதிதாகச் சேர விரும்பும் மாணவர்களுக்கு ஒரு விசேட பரீட்சை இம் மாதம் 24ஆம் திகதி காலை 9-30 மணிக்கு நடைபெறும். கணிதம், தமிழ், விஞ்ஞானம், வர்த்தகம் ஆகிய பாடங்களில் பரீட்சை நடைபெறும்.

— அதிபர்.

[இ-5066]


---

## 25 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் செல்லப்பா சாமுவேல் வைரவநாதன்

மலர்வு: 1 - 10 - 19 4

உதிர்வு: 18 - 5 1966

'உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்,

உங்கள் பிரிவை மறவாத!
மனைவி மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

ஏழாலை வடக்கு,
ஏழாலை.

தகவல்!
டாக்டர் வி. ஆர். டேவி],
தேவாலய வீதி, சாவகச்சேரி.

[4074]

---

## 31 ஆம் நாள் நினைவு தினம்

### அமரர் சவிரிமுத்து பொனிபஸ்



தோற்றம்:
23 - 05 - 1915

மறைவு:
17 - 04 - 1991

அன்பின் இறைவா! இவ்வுலகில் நின்று உம்மிடம் அழைத்துக் கொண்ட சவிரிமுத்து பொனிபஸ் என்பவரின் ஆன்மாவுக்கு நித்திய வாழ்வை அளித்தருளும்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர், உறவினர்கள்.

அன்னை இல்லம்,
28, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

[16844]

---

# மரண அறிவித்தல்கள்

## கந்தசாமி ஞானசுந்தரம்

[ஓய்வுபெற்ற ரீ மேக்கர்]

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த க. ஞானசுந்தரம் அவர்கள் 17-05-1991இல் சிவபதமடைந்துவிட்டார். அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், இலசுந்தரம் [பேபி], சிறீமனோகரன் [யூனிக் மார்க்கெட்டிங் என்ரபிரைஸ்-கொழும்பு], செசவசுந்தரம் [காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபனம்], ஜெயசுந்தரம் [கனடா], பாலசுந்தரம் [ஜேர்மனி], பிரேமறதி, மோகனசுந்தரம் [நீர்ப்பாசனத் திணைக்களம்], ரவிசுந்தரம் [காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபனம்], யோகசுந்தரம் [ஜேர்மனி] ஆகியோரின் அன்புத் தந்தையும், தவமணி, செல்வமணி, சிறீபாலா [ஓய்வுபெற்ற கிராம சேவையாளர்], செல்வராணி [ஜேர்மனி], கலாவதி, வாகினி ஆகியோரின் அன்பு மாமனும், தர்ஷினி, கதர்ஷன், ரவிதரன், ரசிகாந், ரசிகுமார், ரசிதாஸ், வாத்ஸல்யன், அர்ச்சனா, ஜெனகன், நிவிதா, அஜித், நிஷாந்த் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் 18-05-1991 சனிக்கிழமை இன்று காலை 10 மணிக்கு கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படவுள்ளது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்!
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

461, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

[16843]

---

## சின்னத்தம்பி சுப்பிரமணியம்

சரவணையைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி சுப்பிரமணியம் 14-5 91 இல் யாழ் நகரில் காலமானார்.

இவர் பாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பிறைசூடி, சபாரத்தினம், யோகம்மா, பொன்மனர், விஜபலகமி, தணிகாசலம் [லக்ஷ்மி தேம் சென்றர் 4 ஆம் குறுக்குத்தெரு, கொழும்பு], குமரவேல் [கனடா], மனோகரி, மணிசேகரன் [கனடா] ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் யாழ் நகரில் 14-5-91 அன்று நடந்து முடிந்தன இத் தகவலை உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றேன்.

தகவல்!

வசந்தா பார்மிஸ்
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

சு. பாக்கியம்
[மனைவி]

[16729]

---

## லில்லி இராசம்மா கணபதிப்பிள்ளை

லில்லி இராசம்மா கணபதிப்பிள்ளை 17-5-1991 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு C. C கணபதிப்பிள்ளை [பிரதம பிரிவு அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி] அவர்களின் மனைவியும், திருமதி புஷ்பம் குணசிங்கம் [கனடா], டாக்டர் திருமதி சந்திரா அம்பலவாணர் [அதிபர், கிறீன் வைத்தியசாலை, மானிப்பாய்], திருமதி ராணி ஸ்கொட் [கொழும்பு] ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற E. T இசாக், கனம் L. N. இசாக், திருமதி நேசம் கதிர்காமர், திருமதி றோஸ் துரைரத்தினம், திருமதி நல்லம்மா [இராஜரத்தினம், திருமதி அருளம்மா தம்பிராஜா [நவஜீவனம்] திரு A. H. அரியரத்தினம் [நவஜீவனம்] ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற V. குணசிங்கம், அதி வண. D J அம்பலவாணர் [பேராயர், தெ. இ. திருச்சபை, யாழ் ஆதீனம்], திரு. R R. ஸ்கொட் [இளைப்பாறிய S P] அவர்களின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை வட்டுக்கோட்டை, பிஷப் இல்லத்தில் இன்று சனிக்கிழமை 18-5-1991 பி. ப. 3 மணியளவில் நடைபெற்று, பின் சாவகச்சேரி திருச்சபை சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்!
டாக்டர் சந்திரா அம்பலவாணர்
[மகள்]

பிஷப் இல்லம்,
வட்டுக்கோட்டை.

[சி/0004]

---

## திருமதி விசாலாட்சி பூபாலசிங்கம்

மாவிட்டபுரம் இலகடியைச் சேர்ந்த பூபாலசிங்கம் விசாலாட்சி காலமாகி விட்டார் இவர் காலஞ்சென்ற பூபாலசிங்கத்தின் அன்பு மனைவியும், கந்தசாமி [பிரான்ஸ்], தனபாலசிங்கம் [அவுஸ்திரேலியா], பரமேஸ்வரி, சகுந்தலா [அவுஸ்திரேலியா] ஆகியோரின் அன்புத் தாயாரும், சுசிலாதேவி [பிரான்ஸ்], சியாமளி [அவுஸ்திரேலியா], பதஞ்சலி, விஜயகுமார் [அவுஸ்திரேலியா] ஆகியோரின் அன்பு மாமியாரும், பிருந்தா, நர்மதா, கவிதா [மகாஜனாக் கல்லூரி மாணவிகள்], விதுரன் [பிரான்ஸ்], செந்தூரன் [பிரான்ஸ்] சுபி [பிரான்ஸ்], நிர்மலன் [அவுஸ்திரேலியா] ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பண்டத்தரிப்பு-மாதகல் வீதியிலுள்ள இளைப்பாறிய கந்தையா ஆசிரியரின் வீட்டில் இன்று சனிக்கிழமை [18-5 91] காலை 8 மணிக்கு நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் :
கார்த்திகேசு பதஞ்சலி

[16731]

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 18-05-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org